வடகிழக்கு பருவமழை வர இருப்பதையொட்டி செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் தயார் நிலையில் உள்ள இயந்திர தளவாடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில், மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்த குமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஊரக நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி BLA2, BDA, BYO, BLC க்கள் 1740 நபர்களுக்கு தீப ஒளி திருநாளை முன்னிட்டு பரிசு பொருட்கள் வழங்கும் விழா சென்னை, பிராட்வே,டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர்,எஸ்.முரளி,இரா.நரேந்திரன்,பி. ஸ்ரீராமுலு.எம்.சி, கே.ஆர்.அபரஞ்சி,வெ.பரிமளம். ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க.முருகன் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருப்போரூர் தொகுதி

சிறுதாவூர் ஊராட்சி - அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேம்படுத்த நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம்!

சென்னை, அக்.18-

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

எஸ்.எஸ்.பாலாஜி: திருப்போரூர் தொகுதி, சிறுதாவூர் ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி, திருப்போரூர் ஒன்றியத்திற்குட்பட்ட சிறுதாவூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் அரசாணை நிலை எண் 192, நாள் 13.8.2025-ன்படி, நபார்டு வங்கியின் உதவியுடன் 8 வகுப்பறைகள், 1 மாணவர் கழிவறை, 1 மாணவியர் கழிவறை மற்றும் குடிநீர் வசதி ஆகியவை ஏற்படுத்தித் தருவதற்கு ரூ.2.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 4.9.2025 அன்று திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி அவர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

எஸ்.எஸ்.பாலாஜி: சிறுதாவூர் கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில், தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களோடு எத்தகைய தொடர்பில் இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த ஊரிலேயே அந்தக் காலக் கட்டத்தில் பள்ளி தரமுயர்த்தப்பட்டு, கட்டடம் இல்லை என்கிற நிலை 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது. இன்றைக்கு அதற்கு தீர்வு காணப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் எழும்பியிருக்கிறது. அதற்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதைச் சாத்தியமாக்கிய மாவட்டத்தின் நிர்வாக அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். '

திருப்போரூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கென தனியாக விளையாட்டுத் திடல் இல்லை. இப்பள்ளியில் சுமார் ஆயிரம் மாணவிகள் படித்துக்

கொண்டிருக்கிறார்கள். கல்வித் தரத்திலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்த விளங்கக்கூடிய மாணவிகளாக இருக்கிறார்கள். பயிற்சி செய்வதற்கென விளையாட்டுத் திடல் இல்லை. ஆனால், அருகாமையில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கென மிகப்பெரிய பரப்பளவில் விளையாட்டுத் திடல் இருக்கிறது. அதிலே ஒரு பகுதியை பெண்களுக்கென ஒதுக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: குறிப்பாக, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு ஒரு விளையாட்டு என்று வரும்போது, அந்தத் துறையைக் கையாளக்கூடிய, எங்களுடைய எதிர்காலம், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எந்தளவுக்கு அதற்கு முக்கியத்துவம் தருகிறார் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, எங்களுடைய பள்ளிக் கல்வித் துறை சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தும்போதெல்லாம் எங்களுடைய துறையிடத்திலும் சரி, என்னிடத்திலும் சரி, எங்களுடைய ஆசிரியர் பெருமக்கள் ஒரு வேண்டுகோள் வைக்கிறார்கள். "எப்படியாவது, எங்களுடைய PT periodஐ எங்களுடைய கணிதப் பாட ஆசிரியர்களும், அறிவியல் பாட ஆசிரியர்களும் கடன் வாங்கிடாதீர்கள், பிள்ளைகளை விளையாட அனுமதியுங்கள். அதனை வெறும் விளையாட்டு மைதானமாக மட்டும் பார்க்காதீர்கள். அதுவும் ஒரு விதமான வகுப்பறைதான். அங்கும் பலவிதமான பாடங்களை மாணவர்கள் கற்றுக் கொள்வார்கள்," என்று தெரிவிக்கிறார்கள்.

எனவே, அந்தவிதத்தில், அதனையொட்டி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறீர்கள். அந்த இடத்தை சார்ந்து, உடனடியாக இத்துறை அரசு அதிகாரிகளின் மூலமாக, உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உடனடியாக அவற்றிற்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ, அவற்றைச் செய்வதற்கான ஆணைகளை கண்டிப்பாக வெளியிடுவோம்.

எஸ்.எஸ்.பாலாஜி: துணை முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுத் துறையை விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல், அதிலே மிகவும் கவனமாக இருந்து, தொகுதிக்கு ஒரு விளையாட்டுத் திடலை அமைத்துக்கொடுத்திருக்கிறார். பல்வேறு இடங்களில் பள்ளிகளுக்கான விளையாட்டுத் திடல் இருக்கின்றன. இந்த 'ஒரு தொகுதிக்கு ஒரு விளையாட்டுத் திடல்' என்பதை விட, அந்த விளையாட்டுத் திடல்களையெல்லாம் அங்கேயுள்ள பொதுமக்களும், அங்கேயுள்ள விளையாட்டுக் குழுக்களும் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில் உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துத் தர வேண்டும்.

இன்னும் குறிப்பாக நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களும், எப்படி இணக்கமாக, பிணைப்பாக இருக்கிறார்களோ, அதுபோன்று இந்த இரண்டு துறைகளும், இணக்கமாக, பிணைப்பாக இருக்கக்கூடிய துறைகள். ஆகவே, அத்தகைய வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, விளையாட்டுத் துறையின் சார்பில் ஒரு அதிகாரியை நியமித்து, அதை நெறிப்படுத்துகின்ற வகையில், நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது மிகவும் சிறப்பாக இருக்கும்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகளைத் தரமுயத்துவதற்கான விண்ணப்பங்கள் கொடுத்து, முறையாக அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, அதற்கான பணத்தையும் கட்டியிருக்கிறார்கள். அவைகளைத் தரமுயர்த்துவதற்கான உரிய ஆணைகள் பெறப்படாமல் இருக்கிறது. அதையும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா?.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எங்களுடைய துறை சார்ந்தும், துணை முதலமைச்சர் அவர்களுடைய துறை சார்ந்தும் ஒரு ஒருங்கிணைப்பு வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். கண்டிப்பாக, நம்முடைய மாணவர்களின் நலன் சார்ந்து ஒரு நல்ல முடிவு கண்டிப்பாக எடுக்க முடியும்.

அதேபோல, தரம் உயர்த்துவதைப் பற்றி நீங்கள் கேட்டிருந்தீர்கள். ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான கையெழுத்தெல்லாம் பெறப்பட்டு, அதற்கான அரசாணைகளையும் வெளியிட்டிருக்கிறோம். கண்டிப்பாக, நீங்கள் தெரிவிக்கக்கூடிய கருத்துக்களையெல்லாம் முழுமையாக உள்வாங்கிக் கொண்டு, நானும், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்.

அதற்கு முன்பாக, *This is for the Hon'ble Ministers from Punjab, they will be sitting some where in the office and they will be listening to our proceedings. This is for them.* கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக கேட்கும்போது, அவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, தமிழ்நாடு அரசாங்கத்துடைய intention என்ன? ஒரு முதலமைச்சருடைய intention என்ன? என்பதற்காக, *We ask what denies dignity most. For some schools, it is a leaking roof; for others, the absence of a lab or toilet. When we restore dignity, learning follows. The biggest surprise return on investmentsuppose we provide toilet for girls, attendance soared. Sometimes the smallest structure unlocks the largest future* என்கின்ற இந்தக் கருத்தையும், இருமொழிக் கொள்கையுடைய வலிமை இதுதான். அவர்களுக்கு நம்முடைய தமிழ் மொழி தெரியவில்லையென்றாலும்கூட, நமக்கான global ஆக இருக்கக்கூடிய—அதற்காகத்தான் '*Tamil is for our identity, English is for opportunity*' என்று அடிக்கடி சொல்கிறோம், நாம் சொல்கின்ற நம்முடைய அரசாங்கத்தின் intentionஐ பிற மாநிலங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இதை நான் பதிவு செய்கிறேன். நன்றி.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக சேவைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (17.10.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வீ.ப.ஜெயசீலன், வி.சிவகிருஷ்ணமூர்த்தி, ம.பிரதிவிராஜ், கட்டா ரவி தேஜா, எச்.ஆர்.கௌஷிக், அஃதாப் ரசூல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க. என்ற திருட்டுக் கடையை திருட்டுத்தனமாக கைப்பற்றிய

எடப்பாடி பழனிசாமி தி.மு.க.வை எள்ளி நகையாடுவதா?

அமைச்சர் சா.சி.சிவசங்கர் கேள்வி!

சென்னை, அக். 18-

போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று (17.10.2025) சென்னை, தலைமைச் செயலகம், பிரதான கட்டிடம், நான்காவது நுழைவாயில் அருகில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருவாறு

எதிர்க்கட்சித் தலைவர் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய எடப்பாடி பழனிசாமி, திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து ஒரு பேட்டி அளித்திருக்கிறார். அவருடைய நிலைமை இவ்வளவு மோசமாகப் போகும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாத நிலைக்கு சென்று விட்டார். சட்டமன்றத்தில் பேச வேண்டியவர்; மக்கள் மன்றத்தில் பேச வேண்டியவர்; சட்டமன்ற அரசியல் மக்கள் மன்ற அரசியலைத் தாண்டி தற்போது கடைசியாக இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்க்கும் அரசியல் செய்ய வேண்டிய சூழலில் தள்ளப்பட்டுவிட்டார் என்பதுதான் பாவமாக இருக்கிறது. ஒரு அல்வா பாக்கெட்டை வைத்துக்கொண்டு உருட்டுக்கடை அல்வா என்றெல்லாம் கதை விட்டிருக்கிறார். அவர்தான் இன்று திருட்டுக்கடை பழனிசாமியாக இருக்கிறார்.

அ.தி.மு.க.வை லீசுக்கு எடுத்துள்ளார் எடப்பாடி!

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் மறைவிற்குப் பிறகு எப்படி இவர் கைக்கு வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த அ.தி.மு.க. என்ற கம்பெனியை சசிகலாவிடமிருந்து லீசுக்கு எடுத்து நடத்த ஆரம்பித்தவர் பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டு சசிகலாவை சிறைக்கு அனுப்பிவிட்டு திருட்டு கடை தனக்கு கைப்பற்றினார். அதற்குப் பிறகு டி.டி.வி. தினகரனை ஏமாற்றினார். அவரிடம் இருந்து கைப்பற்றினார். அதற்கு பிறகு முன்னாள் முதல்வர்ஓ.பன்னீர்செல்வம் அவர்களுடன் ஒரு கூட்டணி வைத்துக்கொண்டு நீ பாதி நான் பாதி கண்ணே... என்று ஒரு பார்ட்னர்ஷிப் ஆரம்பித்து ஐந்து வருடம் கழித்தார். அதற்குப் பிறகு அவரையும் ஏமாற்றினார். அவரிடம் இருந்தும் தட்டி தூக்கினார். திருட்டு கடை...

இதெல்லாம் முடிந்தது. எதிர்க்கட்சியானார். ஒரு ஐவர் அணியை உடன் வைத்துக்கொண்டு சுற்றினார். அதற்குப் பிறகு இருவரணி ஆகிவிட்டது. அந்த ஐவரணியையும் ஏமாற்றி

திருட்டு கடையை வேலுமணி, தங்கமணி என்ற இருவரை மட்டுமே தன் உடன் வைத்துக்கொண்டு இருவர் அணியாக வைத்துக் கொண்டிருந்தார். தற்போது கடைசியாக டெல்லிக்கு சென்ற பிறகு என்ன ஆனார்? அந்த இருவர் அணியையும் கழற்றிவிட்டு தன்னுடைய திருமகன் மிதுன் பழனிசாமியை மட்டும் வைத்துக்கொண்டு இன்றைக்கு அவர் செல்கிறார். இப்படி அ.தி.மு.க.வை ஒரு திருட்டுக்கடை போல எல்லோரிடமும் கைப்பற்றி இருக்கின்றவர் - தி.மு.க.வை பார்த்து உருட்டுக்கடை என்று சொல்வது எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

தி.மு.க. என்ன செய்திருக்கிறது? என்று மகளிர் உரிமைத் தொகை பெறும் ஒரு கோடியே 15 இலட்சம் பேரிடம் சென்று கேட்டுப் பார்க்கட்டும். உண்மையாக அந்த திட்டம் நடைபெறுகிறதா? உருட்டா? என்று...

புதுமைப் பெண் திட்டத்தில் கல்லூரியில் தமிழகத்தில் பெண் குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களிடம் சென்று கேட்கட்டும் இது உருட்டா? உண்மையா? என்று...

தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு மாணவர்கள் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர்களைச் சென்று கேட்கட்டும் உருட்டா? உண்மையா? என்று...

உண்மையை மறைத்து கதை விடுகிறார் எடப்பாடி!

காலை உணவு திட்டம் பயிலும் பிள்ளைகளிடம் சென்று கேட்கட்டும். இப்படி நடக்கின்ற திட்டங்களை எல்லாம் மறைத்து விட்டு நீட் ஏன் இரத்தாக வில்லை? கல்வி கடன் ஏன் இரத்தாகவில்லை? என்று கேட்கிறார். இதெல்லாம் ஒன்றிய அரசின் அதிகாரத்தில் வருவது என்பது அவருக்கு தெரியும். தெரியவில்லை என்றால், அவர் ஏன் முதலமைச்சராக இருக்கிறார் என்ற கேள்வியே வரும். எதையெல்லாம் உண்மையோ அதையெல்லாம் மறைத்துவிட்டு எதையெல்லாம் கதை கட்டலாமோ அதையெல்லாம் வைத்துக் கொண்டு கதை விடுகிறார்.

இவருக்கு என்ன உருட்டுகடை என்றால், இவர்கள் கொடுத்த வாக்குறுதி பெண்களுக்கு செல்போன் கொடுப்போம் என்று கூறியது இரு சக்கர வாகனம் கொடுப்போம் என்று கூறியது இதுபோன்று பெரிய பட்டியல் இருக்கிறது. இவர்கள் உருட்டிய உருட்டு.

எனவே மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றிக் காட்டிய அரசு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு. இன்றைக்கு இவரை பார்த்து விடியல் பயணம் திட்டத்தை வழங்கி இருப்பதை பார்த்து அருகில் உள்ள மாநிலங்களில் எல்லாம் ஒவ்வொரு மாநிலமாக அமல்படுத்தி வருவதை நாம் பார்த்தோம். காலை உணவு திட்டத்தை இங்கு வந்த பஞ்சாப் மாநில முதல்வர் பகவந்த் மான்சிங் பாராட்டினார். நான் எங்கள் மாநிலத்திலும் அமல்படுத்த போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி எங்கள் மாநிலத்திலும் நாங்கள் அமல்படுத்த போகிறோம் என்று அவர் கூறினார். இப்படி வெளிப்படையாக இங்கு வருகின்ற முதலமைச்சர்கள் பொதுவெளியில் மக்கள் முன்பே சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மிகச் சிறப்பான திட்டங்கள் என்று சொல்கிறார்கள். நாங்களும் அந்த வழியை பின்பற்றப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சராக இருக்கும் முதலமைச்சரை கிண்டல் செய்வதாக நினைத்துக்கொண்டு கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு இவர் இன்றைக்கு இந்த அரசியலை செய்கிறார். அதுவும் உண்மையான அல்வா அல்ல. அதில் பஞ்சு இருக்கிறது என்று வீடியோ பார்த்து பிறகுதான் தெரிந்தது. கடைசியில் அதுவும் திருட்டு அல்வாவாகத் தான் இருக்கிறது.

இந்த இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் அரசியல் அவருக்கு ஏன் வந்தது என்றால் சேர்வார் தோஷம். தற்போது அவர் யாரிடம் சேர்ந்து இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு இருக்கின்ற சிறு பிள்ளைகள் பள்ளி பிள்ளைகள் இன்ஸ்டாகிராமில் போடுவதை பார்த்துவிட்டு அதில் ஒருவர் கேட்டார். அந்த நீதிபதிக்கு கூட பின்பற்றுபவர்கள் இல்லை. எங்களுக்கு தான் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்கள் என்று... அதுபோன்று அந்த பின்பற்றுபவர்களுக்கு போட்டியாக பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இன்ஸ்டாகிராமிலும், ரீல்ஸிலும் அதிகப்படுத்துவதற்கு ஒரு பேட்டியை கொடுத்திருக்கிறார்.

எனவே, நான் எடப்பாடி பழனிசாமிக்கு சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்ற கழகம் 75 ஆண்டு கால வரலாறு உள்ள கழகம். ஒரு மகத்தான இயக்கம். நவீன தமிழகத்தை உருவாக்கிய தலைவர் கலைஞர் தலைமையில் இயங்கிய இயக்கம். இந்தியாவிலேயே ஒரு பெரிய சமூக கட்டமைப்புடன் அடிப்படை கட்டமைப்புடன் இருக்கிறது என்றால் அது தமிழ்நாடு தான் என்பதை மற்ற மாநிலத்தவர் பாராட்டுகிறார்கள் என்றால் அத்தனைக்கும் காரணம் இந்த திராவிட முன்னேற்ற கழகம். இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் எள்ளி நகையாடுவதால் நீங்கள் பெரிய ஆளாக ஆகிவிட முடியாது. இது உங்கள் கட்சியை நிறுவிய மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆ.ரை பார்த்த கட்சி. உங்கள் கட்சியின் முன்னாள் முதல்வராக இருந்த மறைந்த அம்மையாரைப் பார்த்த கட்சி. நீங்கள் எல்லாம் பழனிசாமி எல்லாம் எம்மாத்திரம். ஏதோ காலக்கோளாறு கம்பெனியை தங்களிடம் லீசுக்கு கொடுத்துவிட்டு சிறைக்குச் சென்ற காரணத்தினால் இன்றைக்கு அ.தி.மு.க. என்ற திருட்டு கடையை திருட்டுத்தனமாக கைப்பற்றி கையில் வைத்துக் கொண்டு தி.மு.க.வை எள்ளி நகையாடுகிற இந்த பணியை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு மேல் இந்த வேலையில் இறங்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டியளித்தார்.

ஜாபர்கான்பேட்டையில் மறைந்த சு.ஜம்புலிங்கம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவர்தம் திருவுருவப் படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தியபின், அமைதி ஊர்வலம் சென்று அன்னாரது நினைவிடத்தில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., க.தனசேகரன், கவிஞர் காசி முத்துமாணிக்கம், கே.கண்ணன், மு.ராசா முன்னிலையில் கழகத்தினர் பங்கேற்றனர்.